1979 மார்ச் 19]

(இ) பின்னர் இப்பணி பாதியில் நிறுத்தப்பட்டதா?

(ஈ) இதனைச் சரி செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) கூவம் சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து பத்துஆண்டுகள் ஆகியுள்ளது.

(ஆ) கடைசி திருத்திய மதிப்பீட்டுச் செலவு ரூ. 221.64 இலட்சங்கள்.

(இ) இல்லை,

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

* வினா எண்- 471 திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் கூவம் நதியினைச் சீரமைப்பதற்கு அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த பத்தாண்டுக் காலத்தில் பல இலட்ச ரூபாய் செலவு செய்தும் கூவத்திலுள்ள நாற்றம் இன்னும் போகவில்லை. இந்த சென்னைப் பட்டணத்தில் பல இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் சுகாதாரமாக வாழ்கின்ற வகையில் மீண்டும் கூவத்திலுள்ள நாற்றத்தை அப்புறப்படுத்துவதற்கு ஏதேனும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே அளித்திருக்கின்ற விடையிலேயே விவரமாகச் சொல்லி இருக்கிறேன். ஏற்கெனவே கூவம் சீரமைப்பு திட்டம் என்ற பெயராலே ஒரு திட்டம் 1958-ம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே 4-7-1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலே 118 இலட்சம்

[1979 மார்ச் 19

ரூபாயில் ஒரு திட்டத்தினைப் போட்டார்கள். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கடந்த 1971-ம் ஆண்டிலே மீண்டும் திருத்த மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்காக 199 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டம் 1974-லே முடிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றிக் கேள்விகள் வருகிறபோது அதாவது உறுப்பினர்கள் அனைவரும் வற்புறுத்திச் சொன்னபோது அதனை அரசு பரிசீலிக்கும் என்று அமைச்சரவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். அதன் பின்னர் வரவு செலவுத் திட்டத்திலேயும் ரூபாய் 6 இலட்சத்து 70 ஆயிரம் ஒதுக்கி இருக்கிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் நாற்றம் பொறுக்க முடியவில்லை என்று சொல்லியும் அதைப்பற்றிப் பரிசிலிப்பதாகச் சொன்ன அமைச்சரவர்கள் ஏன் பரிசீலிக்கவில்லை? ஆகவே அதை மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்தில் அதற்குண்டான விரிவான அறிக்கைகளை வெளியிடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கூவத்தை மணக்கச் செய்வதற்காக நான் ஒரு திட்டத்தை இந்த அரசுக்குக் கூறி இருந்தேன். இந்தக் கூவத்தின் நாற்றம் பொறுக்க முடியவில்லை. இந்த கூவத்திலே வருகின்ற நீர் நல்ல சத்துள்ள நீராக இருக்கின்ற காரணத்தால் அந்தக் கூவம் நீரைக் கொண்டு அந்தக் கூவம் கரைகளில் வாழைத் தோட்டம் காய்கறித் தோட்டம் போடுவதுநல்லது என்று கூறி இருந்தேன் ஆகவே அவ்வாறு கூவம் நீரை வடித்தெடுத்து அருகில் தோட்டம் போடுவதால் அது சுத்தமாக ஆவதற்கு வழி ஏற்படும். ஆகவே அவ்வாறு செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதற்கான ஒரு திட்டத்தை இந்த அவையிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதாவது இதில் புல் வளர்க்கும் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூ1.64 லட்சம் ரூபாயில் தயாரிக்கப்பட்ட கூவம் திட்டத்தின் மூலம் கூவம் மணப்பதற்குப் பதிலாக மனதைக் குமட்டுகிற

1979 மார்ச் 19]

நிலையில் இருக்கிறது. இதை மாற்றி கூவம் மணப்பதற்கு தகுந்த திட்டம் எதையாவது இந்த அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு பக்கீம்காம் கானாலை சீர்படுத்தி அதில் உள்நாட்டுப் போக்குவரத்து நடத்துவதற்கு ஏதுவாக படகுகள் விடுவதற்கும் ஏதேனும் செயற்குறிப்புகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூவம் சீரமைப்புத் திட்டம் ஏற்கனவே 74-ல் முடிக்கப்பெற்றது. இப்போது சிறப்புத் திட்டமாக அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை. ஆனாலும் கூவம் ஆற்றோடு ஒட்டிய பக்கீம்காம் கானால் திட்டமும்.... It is all interconnected. it is inseparable என்கின்ற அளவில் பக்கீம்காம் கால்வாயைச் சீர்படுத்தி, அதன் மூலமாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படகுகளை விடுவதற்கும்; அத்துடன் உட்நாட்டு போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு மாஸ்டர் பிளான் ஒன்றை தயார் செய்து மைய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இதற்கு 560 லட்சம் ரூபாய் செலவாகும். இதற்கான அனுமதியை வழங்கும்படி மைய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் தருவதாக சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வாங்காத பொருளுக்கு-கொள்ளை விலை என்பது போல், 221.64 லட்சம் ரூபாய் செலவாகியும் கூவம் இன்னும் சீராக்கப் படவில்லை. இதற்கு வேறு ஏதாவது புதிய திட்டத்தை ஏற்படுத்தி இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் முடிக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட புதிய திட்டம் எதுவும் இந்த அரசின் பரிசீலனைக்கு வரவில்லை. 1976-77-ல் கூவம் ஆறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, கூவத்தில் கழிவு நீர் கலக்கின்ற காரணத்தால்தான் இந்த துர்நாற்றம் ஏற்படுகிறது. இதை தடுத்தால் துர்நாற்றம் நின்று விடும். ஆகவே கழிவு நீரை இதில் கலக்காமல்—இதில் விடாமல் வேறு வழியில் கொண்டு செல்வதற்கும், கூவத்தைச் சீரமைப்பதற்கும் ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டால்தான் கூவம் பயன்பெற முடியும். ஆகவே இதில் ஒரு ப்ராஸ்பெக்டீவ் அஸெஸ்மென்ட் செய்து ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்துவார்களா, அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா? இருக்கிறதென்றால் அதன் விவரங்கள் என்ன?

[1979 மார்ச் 19

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே சொன்னதைப் போல் பக்கிம்காம் கால்வாய்த் திட்டத்தோடு சேர்த்து அந்தத் திட்டம் அமலுக்கு வந்தால்-கூவம் திட்டத்தையும் அதில் எடுத்துக்கொண்டு, இன்று மணக்காமல் இருக்கின்ற கூவம் மணக்கின்ற அளவிற்குத் திட்டத்தை நடத்த-இந்த நல்ல பணியைச் செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கூவம் ஆறு திட்டத்தில் தெர்மல் பிளான்ட்–டிலிருந்து வருகின்ற தண்ணீரும், கழிவு நீர் கலப்பதாலும் வருகின்ற துர்நாற்றத்தைப் போக்குவதற்கு பொதுப்பணித்துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பக்கிம்காம்கனால் ஆந்திர மாநிலத்திலிருந்து ஆரம்பித்து புதுவை மாநிலத்தில் போய்ச் சேருகிறது. இந்த பக்கிம்காம் கனாலை சீரமைப்புச் செய்வதற்கு மத்திய அரசிலிருந்து பணம் வாங்குவதற்கு—இதற்கென்று இருக்கின்ற நேவிக்கேஷன் இலாகாவில் பேசி—அங்கிருந்து நிதியைப் பெற்று பயன்படுத்துவதற்கும், அதன் மூலம் பக்கிம்காம் கனாலை போக்குவரத்துக்குப் பயன் உள்ளதாக ஆக்குவதற்கும் நேவிக்கேஷன் இலாகாவிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே எனது பதிலில் சொன்னேன். இதைப்பற்றி மத்திய போக்குவரத்து அமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். இதற்கான ஒரு மாஸ்டர் பிளான் அனுப்பியிருக்கிறோம். இதற்காக 560 லட்சம் ரூபாய் ஆகும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறோம். இவைகள் எல்லாம் பக்கிம்காம் கனால் சீரமைப்புக் காகத்தான்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்ட திட்டமாகும். பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்த இந்தத் திட்டம் சரியாக நிர்வகிக்கப்படாததன் காரணமாக குறிப்பாக நெருக்கடி காலத்தில் சரியாக நிர்வகிக்கப்படாததன் காரணமாக இப்போது சீரழிந்து கிடக்கிறது. இதைத் தற்போதைய அரசும் அறிவித்ததாக என் நினைவு. இந்தக் கூவத்தின் இரு ஓரங்களிலும் சீர்கேடு அடைந்துவருவதைச் சுட்டிக்காட்டிய நேரத்தில்—அதற்கான சீரமைப்பு வேலைகள் நடந்து வருவதாக அறிவிக்கப்பட்டது. அந்த வேலைகள் இப்போது நடைபெற்று வருகிறதா? மேலும் தேசீயக் கவி பாரதியார் பாடியது போல்—

1979 மார்ச் 19]

''சிந்து நதியின்மிசை நில்வினிலே
சேர நன் ஞட்டிளம் பெண்களுடனே
சுந்தர தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்....

என்று.— இதற்காக ஏற்படுத்தப்பட்ட தோணிகள் முன்பு ஓடிக் கொண்டிருந்தன. இப்போது அந்தத் தோணிகள் ஓடுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விக்கே தாங்கள் மூன்று நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுகிறீர்கள். சீக்கிரமாகக் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். சீக்கிரம் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா : எனவே, நமது பாரதியார் கூற்றின்படி, அத்தகைய தோணிகளை மீண்டும் அங்கே விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய திட்டம் தான் இது. 4-7-1967 அன்று அதற்கு 118 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப் பட்டது. ஆனால், முடிவு பெற்ற காலம் கடந்த 1974 என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூவம் மணக்கும் என்று மட்டும் சொல்லவில்லை. இதே வார்த்தைகளை அந்த நேரத்திலும் சொன்னார்கள். சிந்து நதி மீதினிலே படகு விடுவோம், சுந்தரத் தெலுங்கினிலே பாட்டிசைப்போம், பெண்கள் குலாவி வருகின்ற காட்சிகளையெல்லாம் பற்றிச் சொன்னார்கள். ஆனால், 1974-க்குப் பிறகு 76 ஜனவரி 31 வரையிலும் அந்த ஆட்சி இருந்தது என்பதை மறந்து விட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். 74-க்குப் பின்னால். இந்தத் திட்டம் என்ன ஆயிற்று, எப்படிப்பட்ட நிலைமையில் அந்தத் திட்டம் இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசித்துப் பார்த்தால், உண்மை விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது ஒழுங்குப் பிரச்னை இல்லை; தன்னிலை விளக்கம் இல்லை. உட்காருங்கள். தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பல திட்டங்கள் போட்டு, இந்தக் கூவத்தை சீரமைக்க முடியாது என்ற காரணத்தால், இந்த கூவத்திலே இருக்கின்ற தண்ணீரை பெரிய பெரிய குழாய்களின் மூலமாக செங்கற்பட்டு மாவட்டத்

திற்கு கொண்டுபோய், அங்கே விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அந்த மெஷின்கள் எல்லாம் பிரயோஜனப் படாமல் இருக்கின்றன. இந்த மெஷின்களை எல்லாம் ஏலம் போடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குக் கொண்டு போகக்கூடிய சிறப்புத் திட்டம் நம்மிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

திரு. ப. சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டத்திலே என்ன பணிகள் மேற்கொள்ளப் பட்டன? அந்தப் பணிகள் அவரவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இப்போது சீராக நடைபெற்று வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதற்காகத் தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

ஏரி மராமத்துக்குத் தனிப்பிரிவு

* வினா எண் 472—திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967—க்கு முன்னால் செயல்பட்டு வந்த ஏரி மராமத்துப் பிரிவை மீண்டும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை;

எலத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம்

* வினா எண் 473—திரு. எம். எம். ஏ. ரசாக்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை தாலூக்கா, எலத்தூர் கிராமத்தில், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடமும், அலுவலர் குடியிருப்பும் கட்டி நான்கு ஆண்டு காலமாகியும் கட்டிடம் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?